செ.வெ.எண்: 545 நாள்: 21.08.2019

## முதலமைச்சரின் குடிமராமத்து திட்டப் பணிகள் போர்கால அடிப்படையில் நடைபெற்று வருகிறது.

## புதுக்கோட்டை மாவட்டத்தில் குடிமராமத்து பணிகளை பார்வையிட்டு பொதுப்பணித்துறை அரசு முதன்மைச் செயலாளர் டாக்டர்.கே.மணிவாசன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

---

புதுக்கோட்டை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் முதலமைச்சரின் குடிமராமத்து திட்டப் பணிகள் மற்றும் தூர்வாரும் பணிகளை பொதுப்பணித்துறை அரசு முதன்மைச் செயலாளர் டாக்டர்.கே.மணிவாசன்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (21.08.2019) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின் போது மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி.இ.ஆ.ப., அவர்கள், தூர்வாரும் பணிக்கான சிறப்பு கண்காணிப்பு அலுவலர் திருமதி.சிரேயாசிங்,இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விவசாயிகளின் முன்னேற்றத்திற்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். தமிழகத்தில் உள்ள ஏரி, குளங்களை தூர்வாரி மழைநீரை சேமித்து நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்தி விவசாயத்தை மேம்படுத்தும் வகையில் குடிமராமத்து திட்டம் என்ற சிறப்பான திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் குளங்கள் தூர்வாருதல், கரைகளை பலப்படுத்துதல், கலிங்குகள், வரத்து வாரிகளை சீரமைத்தல் போன்ற பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் இப்பணிகள் அப்பகுதியில் உள்ள பாசனதாரர்கள் மூலமே மேற்கொள்ளப்படுகிறது. அந்த வகையில் புதுக்கோட்டை மாவட்டத்தில் முதலமைச்சரின் குடிமராமத்து திட்டத்தின் கீழ் 2019-20 ஆம் ஆண்டிற்கு 66 பணிகள் ரூ.20.27 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டு தற்பொழுது பணிகள் நடைபெற்று வருகிறது.

அந்த வகையில் இன்றைய தினம் புதுக்கோட்டை வட்டம், ஆதனக்கோட்டையில் முதலமைச்சரின் குடிமராமத்து திட்டத்தின் கீழ் ரூ.27.லட்சம் மதிப்பீட்டில் மலையடிக்குளம் துார்வாரும் பணியையும், கறம்பக்குடி வட்டம், கீராத்துார் மகாராஜ சமுத்திரம் ரூ.27 லட்சம் மதிப்பீட்டில் துார்வாரும் பணிகளை பொதுப்பணித்துறை அரசு முதன்மைச் செயலாளர் டாக்டர்.கே.மணிவாசன்,இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின் போது அரசால் அறிவுறுத்தப்பட்டுள்ள விதிமுறைகளின் படி குளங்களை துார்வாரவும், கலிங்குகள் மற்றும் நீர்வரத்து வாரிகள் சீரமைப்பு பணிகளை தரமாக மேற்கொள்ளவும், மேலும் போர்கால அடிப்படையில் நடைபெற்று வரும் மேற்குறிப்பிடப்பட்ட பணிகள் அனைத்தையும் விரைவாக செய்து முடிக்கவும் சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இந்த ஆய்வின் போது பொதுப்பணித்துறை நடுக்காவேரி வடிநிலக் கோட்டப்பொறியாளர் திருவேட்டைசெல்வன், தெற்கு வெள்ளாறு கோட்ட செயற்பொறியாளர் சரவணன், செயற்பொறியாளர்கள் தங்கராஜ், அன்பரசன், உதவிப் பொறியாளர் உமாசங்கர் மற்றும் பாசனதாரர்கள் உடனிருந்தனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**